Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 110

வியாழக்கிழமை 16 மார்ச் 2023

பங்குனி 02 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054




## போராட்டம் வெற்றி



கொழும்பு, மார்ச் 16
நேற்று முன்னெடுக்கப்பட்ட பணிப் புறக்கணிப்புப் போராட்டம் வெற்றியடைந்துள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். »11

## போராட்டத்தை இடைநிறுத்தியது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

### ஜனாதிபதி சாதக சமிக்ஞை

கொழும்பு, மார்ச் 16
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்றுக்காலை ஆரம்பித்த தொழிற்சங்க நடவடிக்கை இன்று வியாழக்கிழமை காலை 8 மணியுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்படு »04

## டொலர் மீண்டும் ஏறுமுகம்

கொழும்பு, மார்ச் 16
கடந்த சில நாள்களுக்கு முன்னர் சடுதியான அதிகரிப்பைக் காட்டிய இலங்கை ரூபாவின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. நேற்றுமுன் »11

### அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு

# நாட்டின் பல்வேறு துறைகள் நேற்று முற்றாக முடங்கின!

### ஆர்ப்பாட்டங்களும் பரவலாக முன்னெடுப்பு

கொழும்பு, மார்ச் 16
நாடளாவிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நாட்டின் மருத்துவமனை, ரயில் மற்றும் பாடசாலை செயற்பாடுகள் முடங்கின. வடக்கு மாகாணத்திலும் மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்புக் காரணமாகப் பல்வேறு சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன. »11



## ஸஹ்ரானின் மனைவிக்கு பிணை

கொழும்பு, மார்ச் 16
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரி ஸஹ்ரான் ஹாசிமின் மனைவிக்கு கல்முனை மேல்நீதிமன்றம் நேற்றுப் பிணை வழங்கியது. »11

## பிசுபிசுத்து விட்டதாம் எதிர்ப்பு நடவடிக்கை!

### அரசாங்கம் கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 16
புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து கல்வி, சுகாதாரம், ரயில், மின்சாரம், பெற்றோலியம், துறைமுகம் போன்ற பல சேவை »11

## ஐ.எம்.எப். நிதி வந்ததும் அமைச்சரவை மாற்றம்

கொழும்பு, மார்ச் 16
சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி கிடைத்தவுடன் அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது என்று அரச உயர் மட்டங்களில் இருந்து »11

## சிறுவர் இல்லத்திலிருந்த மூன்று சிறுமிகள் மாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 16
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் இயங்கும் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த மூன்று சிறுமிகளைக் காணவில்லை என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப் »04

# பலவந்தமான தன்பால் சேர்க்கை; மாணவர்களைச் சீரழிக்கும் கும்பல்!

### உயிர்மாய்க்க முயன்ற மாணவன் திடுக்கிடும் தகவல்

### பொலிஸ் விசாரணைகள் தீவிரம்

### சீரழிவுக் கும்பல் விரைவில் கைது?

யாழ்ப்பாணம், மார்ச் 16
யாழ்ப்பாண நகரிலுள்ள பிரபல ஆண்கள் பாடசாலையில் பயிலும் தரம் 11 மாணவன் ஒருவர் மாடியில் இருந்து கீழே குதித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், பலவந்தமான தன்பால்சேர்க்கைக்கு மாணவன் உட்படுத்தப்பட்டதாலேயே அவர் உயிர்மாய்க்க முயற்சித்தார் என்று புதிய »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை மாணவர்களுக்கு உளநலப் பரிசோதனைகள்

## பேராதனைப் பல்கலை ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 16

**பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்களிடையே உளநலப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது.**

இதுதொடர்பில் பேராதனைப் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் ரெரன்ஸ் மதுஜித் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக மாணவர்கள் பலர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொள்ளும் சம்பவங்கள் நாட்டில் அதிகரித்து வருகின்றன.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களை உளவளப் பரிசோதனைக்குட்படுத்திய நிலையில் அவர்களில் 600 மாணவர்களுக்கு உளவள ஆலோசனை தேவைப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய உளவள பரிசோதனையில் மருத்துவ சிகிச்சை தேவைப்படும் மாணவர்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்படும். அந்தக்காலத்தில் மாணவர்களை விளையாட்டு போன்ற ஏனைய செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் மனநிலையை ஒழுங்கமைக்க முடியும் - என்றார். (ச-6)

## சட்டக் கல்லூரி பரீட்சைகளை

# ஆங்கிலமொழியில் நடத்துவது அடிப்படை உரிமை மீறலாகும்

## ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 16

இலங்கை சட்டக் கல்லூரியின் பரீட்சைகளை ஆங்கிலமொழியில் மாத்திரம் நடத்துவதை கட்டாயமாக்குவது தொடர்பில் சட்டக் கல்விப் பேரவை எடுத்த தீர்மானத்துக்கு நீதி , சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சசார் ஆலோசனைக் குழு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தலைமையில் அண்மையில் நடைபெற்ற நீதி, சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

ஆரம்ப நீதிமன்றங்களில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகியன பிரதான மொழிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றில் மாத்திரம் ஆங்கில மொழி பயன்படுத்தப்படுகிறது.

மேலும் வடக்கில் தமிழ், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் நீதிமன்ற விசாரணைகள் தமிழிலும், சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்களில் சிங்கள மொழியிலும் நீதிமன்ற விசாரணைகள் நடைபெறுகின்றன என உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

பெரும்பாலான கிராமப்புறங்களில் ஆங்கிலக் கல்வி குறைவாகவுள்ளது. அந்தவகையில் ஆங்கிலத்தில் பரீட்சையை கட்டாயமாக்குவது அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமையும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, ஒரு மாணவர் தனது முதன்மை மொழியான தாய்மொழியில் பரீட்சையை எதிர்கொள்வதற்கான சுதந்திரம் காணப்படவேண்டும் என்றும் குழுவில் முன்மொழியப்பட்டது.

ஆகவே இலங்கை சட்டக் கல்லூரியின் பரீட்சைகளை ஆங்கிலமொழியில் நடத்துவதைக் கட்டாயமாக்குவது தொடர்பில் சட்டக் கல்விப் பேரவை எடுத்த தீர்மானத்துக்கு நீதி, சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சசார் ஆலோசனைக் குழு இணங்காது - என்று தெரிவித்துள்ளது. (ச-இ)

# நிறுவை, அளவை முத்திரையில்லை

## வியாபாரிகள் மீது சட்டநடவடிக்கை

சாவகச்சேரி, மார்ச் 16

சாவகச்சேரி பொதுச்சந்தை விற்பனை அலகுகளில் இந்த வருடத்துக்குரிய நிறுவை, அளவைகள் முத்திரையிடாத உபகரணங்களை வைத்திருந்த வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலக அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் அலகினர் நேற்றுப் புதன்கிழமை மேற்கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையின்போது இந்த முறைகேடு கண்டறியப்பட்டுள்ளது.

நகரசபை எல்லைக்குட்பட்ட அனைத்து வியாபார, வர்த்தக, தொழில் நிலையங்கள் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் நிறுவை, அளவை உபகரணங்களுக்கான முத்திரையிடல் கடந்த மாதம் நகரசபையில் மேற்கொள்ளப்பட்டது.

அதற்கமைய குறித்த காலப்பகுதியில் நிறுவை, அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடாத உபகரணங்களைப் பயன்படுத்திய வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-9)

## ஜனநாயகத்தைப் பாதுகாக்க பரந்துபட்ட கூட்டணி தேவை

கொழும்பு, மார்ச் 16

எதிர்க்கட்சிகளுக்கிடையிலான சொற்போர் முடிவுக்கு வரவேண்டும். ஜனநாயகத்தை பாதுகாக்க அனைத்து கட்சிகளும் இணைந்து பரந்துபட்ட கூட்டணியை அமைக்க வேண்டும் இவ்வாறு பெரமுனவிலிருந்து வெளியேறி, டலஸ் அணியுடன் சங்கமித்துள்ள பேராசிரியர் சரித ஹேரத் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தேர்தலை ஒத்திவைத்து, மக்களை அடக்கி ஆளலாம் என நினைத்த ஆட்சியாளர்கள் படுதோல்வி அடைந்ததே இந்நாட்டு வரலாறு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் எதிரணிகளுக்கே மக்கள் மூன்றிரெண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்கியுள்ளனர்.

தற்போதைய அரசு தேர்தலை நடத்தாது என்றே எண்ணத் தோன்றுகிறது. எனவே, எதிரணிகள் தம்மிடையிலான விமர்சனங்களை விடுத்து, ஜனநாயகத்தைப் பாதுகாக்க பரந்துபட்ட கூட்டணியாக ஒன்றுபடவேண்டும்' - என்றார். (ம-44)

# உடையார்கட்டு குளத்தின் கீழ் 1, 280 ஏக்கரில் சிறுபோகம்

முல்லைத்தீவு, மார்ச் 16

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உடையார்கட்டுக் குளத்தின் கீழுள்ள ஆயிரத்து 280 ஏக்கர் வயல் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உடையார்கட்டு தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் சிறுபோக நெற்செய்கை கூட்டம் இடம்பெற்றபோதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

உடையார்கட்டுக் குளத்தின் கீழுள்ள ஆயிரத்து 280 ஏக்கர் வயல் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் முதலாம் திகதி நீர் திறந்து விடப்படும். எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை சேற்று விதைப்புக்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

அதேவேளை விவசாய செய்கையின் விதிமுறைகள் மற்றும் கால்நடை கட்டுப்பாடு என்பவற்றை மீறும் சந்தர்ப்பங்களில் தண்டங்களும் அறவிடப்படும் என கூட்டத்தின் போது முடிவெடுக்கப்பட்டது.

கூட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசசெயலாளர், முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர், முத்தையன் கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராமஅலுவலர்கள் மற்றும் கமக்கார அமைப்பினர் கலந்துகொண்டனர். (ச-19)

# கலாசார நிலையத்தில் மகளிர் தின நிகழ்வுகள்




யாழ்ப்பாணம், மார்ச் 16

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சும் தொழிற்றுறை திணைக்களமும் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வு யாழ். கலாசார மத்திய நிலைய வளாகத்தில் நேற்று இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் இந்தியத் துணைத்தூதுவர் ஆகியோரின் பங்குபற்றலுடன் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 8 சிறந்த பெண் சாதனையாளர்கள் மற்றும் 15 பெண் தொழில் முயற்சியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் 'பெண்களின் சமூக முன்னேற்றத்தில் கல்வியின் பங்கு' எனும் தலைப்பில் கருப்பொருளில் நடத்தப்பட்ட குறும்படம் மற்றும் புகைப்படப் போட்டிகளில் வெற்றியீட்டிய வர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அதேவேளை நிகழ்வில் ஓர் அங்கமாக பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் முகமாக அவர்களின் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றன. வளாகத்தில் இதற்கென அமைக்கப்பட்ட கொட்டகைகளில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன. (ச-17)

## நாமல் ஒரு புறொய்லர்!

### வீரவன்ஸ சீண்டல்

கொழும்பு, மார்ச் 16

நாமல் ராஜபக்ச ஒரு பராயமடையாத புறொய்லர் கோழி என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ.

அம்பாந்தோட்டையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊர்வலமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் துன்பத்தில் சிக்கியுள்ளவேளையில் நாமல் ராஜபக்ச பொதுஜன பெரமுன உறுப்பினர்களுடன் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருக்கிறார். இவர் ரணிலைப்போன்று செயற்படுகிறார். இவர் இன்னமும் ஒன்றையும் புரிந்து கொள்ளவில்லை. மக்கள் கோபப்படுவதில் நியாயமிருக்கிறது. இவரது செயற்பாடு ராஜபக்ச குடும்பத்தினருக்கும் நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது. இறுதியாக நடைபெற்ற தேர்தலில் யோஷித ராஜபக்சவை பதுளை மாவட்டத்தில் நிறுத்த இவர் தீர்மானித்திருந்தார். ஆனால் கோத்தாபய அதனை நிராகரித்து டலஸை நிறுத்தினார் - என்றார். (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்

# பங்குனித் திங்கள் உற்சவ விதிமுறை

யாழ்ப்பாணம், மார்ச் 16

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தென்மராட்சி மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலயத்தின் பங்குனித் திங்கள் உற்சவம் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நான்கு தினங்கள் நடைபெறவுள்ளன. முதலாம் பங்குனித் திங்கள் உற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதியும், இரண்டாம் பங்குனித் திங்கள் உற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதியும், மூன்றாம் பங்குனித் திங்கள் உற்சவம் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதியும், நான்காம் பங்குனித் திங்கள் உற்சவம் ஏப்ரல் 10 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. அதற்கமைய உற்சவ தினங்களின் விதிமுறைகள் சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

உற்சவம் நடைபெறவுள்ள 4 தினங்களில் அன்னதானம், பொங்கல் என்பன இடம்பெறவுள்ளன. அன்னதானம் மற்றும் பொங்கல் தேவைகளுக்குப் பயன்படுத்தும் தண்ணீர் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் ஒப்படைத்து பரிசோதனைக்குட்படுத்தப்பட வேண்டும். அதன்பின்னர் அந்த நீர் பயன்படுத்தக்கூடியது என்னும் அறிக்கை வழங்கிய பின்னரே பயன்படுத்தவேண்டும். அன்னதான சமையல் பணியில் ஈடுபடுபவர்கள், மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும். வியாபார நிலையங்களை நடத்துவோர் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும்.

அத்துடன் கோயில் வளாகத்தில் நடமாடும் வாகனங்கள் மூலம் உணவுப் பொருள்கள் விற்பனை செய்வோர் கட்டாயம் மருத்துவச் சான்றிதழ் வைத்திருக்கவேண்டும். உற்பத்திப் பிரதேசத்தில் உரிய வியாபார உத்தரவுப் பத்திரம் பெற்றிருக்கவேண்டும். மருத்துவ சான்றிதழ் மற்றும் வியாபார உரிமச் சான்றிதழ் இன்றி வியாபாரம் மேற்கொள்வோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ளனர்.

இதேவேளை பங்குனித் திங்கள் உற்சவ நாள்களில் பக்தர்கள் பொங்கல் வழிபாடு மற்றும் நேர்த்திக் கடன்களை அதிகாலை 5மணி முதல் இரவு 10 மணி வரை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்று கண்ணகை அம்மன் ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (ஒ-14,66,9)

# கிளிநொச்சியில் விரைவில் காற்றாலை மின்திட்டம்

கிளிநொச்சி, மார்ச் 16

**கிளிநொச்சி மாவட்டத்தில் விரைவில் காற்றாலை மின்திட்டம் அமைக்கப்படும். அந்தத் திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் கிளிநொச்சிப் பகுதி மக்களுக்கு குறைவான கட்டணத்தில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் காற்றாலை மற்றும் சூரியமின்சக்தி மூலமான மின் திட்டங்களை உருவாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விஞ்ஞானபூர்வமாக ஆய்வுசெய்த பின்னர், சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதற்கு உத்தேசித்திருக்கின்றோம். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் எப்பகுதியில் அது உற்பத்தியாக்கப்படுகின்றதோ, அப்பகுதி மக்களுக்கு 24 மணிநேர தடையில்லாத மின்சாரத்தை குறைந்த கட்டணத்தில் வழங்கும் ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது - என்று அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-113)




## மன்னார் மாவட்டச்செயலருக்கு 'சிங்கப்பெண்' விருது

மன்னார், மார்ச் 16

மன்னார் இந்துமதபீடத்தால் மன்னார் மாவட்டச்செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல்லுக்கு 'சிங்கப்பெண்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

மன்னார் மாவட்ட மகளிர் தின விழாவும், சாதனைப் பெண்களுக்கான விருது வழங்கலும் மன்னார் நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்த விழாவில் மன்னார் மாவட்டச்செயலருக்கு 'சிங்கப்பெண்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

மேலும் சாதனைப் பெண்களுக்கான விருது, மூத்த பெண்களுக்கு கௌரவிப்பு மற்றும் மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கல் என்பன இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேரா சிரியர் சிறிசற்குணராஜா கலந்துகொண்டார். (ஒ-14,213)

## வன்முறைக் குழுவால் பெற்றோல் குண்டுவீச்சு

*நாகர்கோவிலில் மீளவும் பதற்றம்*

கொழும்பு, மார்ச் 16

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகர்கோவில் மேற்குப் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது இனந்தெரியாதோரால் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இன்னொரு மோட்டார் சைக்கிள் பகுதியளவில் எரிந்து சேதமாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இனந்தெரியாத வன்முறைக்குழு வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து நொருக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளது. சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நாகர்கோவில் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு பொலிஸாருக்கும் வன்முறைக்கும்பலுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக கைகலப்பு ஏற்பட்டதையடுத்து பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி நிலைமையைக் கட்டுப்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-27)

தேர்தல் சட்டவிதிகளுக்கமையவே

# அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் மயமாக்கத் தாமதம்

## வலி.கிழக்கு தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையால் முன்னெடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை தேர்தல் சட்டவிதிமுறைகளுக்கு மதிப்பளித்தே பிற்போடப்படுவதால் மக்கள் பயன்பாட்டுக்கு கையளிக்கத் தாமதமடைகிறது என தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலப்பகுதியில் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையால் அபிவிருத்தித் திட்டங்கள் சில பூர்த்தி செய்யப்பட்டு தற்போது மக்கள் பயன்பாட்டுக்கு விடுவதற்கு தயார் நிலையிலுள்ளன. புத்தூரில் 15 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மீன்சந்தைக் கட்டுமானம் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதேபோல் மேலதிகமாக அங்கு 20 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் மரக்கறிச்சந்தை மற்றும் இறைச்சிக் கடைத் தொகுதிக்கான ஆரம்ப கட்டப் பணிகள் இடம்பெறுகின்றன.

நீர்வேலி கந்தசாமி ஆலயத்தால் வழங்கப்பட்ட நிலத்தில் 3.4 மில்லியனில் நீர்வேலியில் வலிகாமம் கிழக்குக்கான பொது சிறுவர் பூங்கா அமைப்பதற்கான பணிகள் தற்போது பூர்த்தியாகியுள்ளன.

மேலும் பிரதேசசபையின் கோப்பாய் உபஅலுவலகத்துக்காக 7 மில்லியனில் சபை நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட காணிக் கட்டடத்தில் மேலதிகமாக 7 மில்லியன் செலவிடப்பட்டு மேலதிக அலுவலக வசதிப்படுத்தல் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது.

அச்சுவேலி சந்தையில் மரக்கறிச் சந்தை அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட நிலையில் தற்போது 9 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட மீன்சந்தைக் கட்டுமான வேலைகளும் பூர்த்தி நிலையை அடைந்துள்ளன.

மேற்படி திட்டங்கள் யாவற்றையும் உள்ளூராட்சிசபைத் தேர்தலின் பின்னர் மக்கள் பயன்பாட்டுக்கு கையளிக்கத் தீர்மானித்திருந்தோம். எனினும் தேர்தல் பிற்போடப்பட்டமையால் அந்தத் திட்டங்களை மக்கள் மயப்படுத்தத் தாமதமடைகிறது - என்றார். (ச-இ)

*கிளிநொச்சியில்*

## 30 குடும்பங்களுக்கு இலவசமாக அரிசி!

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சியில் சுமார் 30 ஆயிரம் குடும்பங்கள் அரசாங்கத்தின் இலவச அரிசித் திட்டத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலொன்று, கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் தற்போது ஒரு கிலோ நெல் 100 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 5 லட்சத்து 85 ஆயிரத்து 832 கிலோ நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நெல், அரசாங்கத்தின் இலவச அரிசி வழங்கும் திட்டத்துக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 30 ஆயிரத்து 171 குடும்பங்களுக்குப் பகிர்ந்து வழங்கப்படும் என்று அந்தக் கலந்துரையாடலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராட்டத்தை...

கின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக் குழு மற்றும் மத்திய குழு உறுப்பினர் வாசன் ரத்னசிங்கம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து நேற்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு முக்கியமான ஆவணம் ஒன்று கிடைத்துள்ளது என்று தெரிவித்த அவர், அந்த ஆவணத்தில் இதுவரை இணக்கம் காணப்படாத பல விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார் என்று குறிப்பிட்டார்.

அதையடுத்து தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவதற்கு வழியேற்படுத்தும் வகையில் போராட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எமது விசேட கோரிக்கைகளுக்கு உரிய பதில்கள் வழங்கப்படவில்லை. இது தற்காலிக இடைநிறுத்தமே தவிர, நிரந்தரமானதல்ல. கடந்த காலங்களில் எமக்குக் கிடைக்கப் பெற்ற பதில்களை விட, இதில் சாதகமான விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. அரசாங்கம் சாதகமான பதில் வழங்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய வரிக் கொள்கைக்கு எதிராக தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்கங்கள் கடந்த 9ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. கடந்த திங்கட்கிழமை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் அதில் இணைந்தது.

அன்று 4 மாகாணங்களில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்தது. கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் தங்களது கோரிக்கைக்கு உறுதியான தீர்வு வழங்கப்படாமையால் நேற்று எஞ்சிய 5 மாகாணங்களிலும் தொழிற்சங்க நடவடிக்கைகளை அந்தச் சங்கம் விஸ்தரித்திருந்தது.

இந்த நிலையில், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கைகள் அடங்கிய ஆவணம் ஒன்று நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டது. அதற்கு அனுப்பப்பட்டுள்ள பதில் கடிதத்தில் சாதக சமிக்ஞைகள் காட்டப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

(அ-எ-இ)

## சிறுவர்...

பட்டுள்ளது.

சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த 14,15 மற்றும் 16 வயதுச் சிறுமிகளையே காணவில்லை என்று கூறப்படுகின்றது. அவர்களில் இருவர் முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் உரும்பிராயைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-எ-125)

# மனித மலத்தை முகர ரூ.1.5 லட்சம் வேதனம்

### லண்டனில் பணிவெற்றிடம்

உரோம், மார்ச் 16

மனித மலத்தை முகர்ந்து பார்க்கும் வேலைக்கு லண்டனைச் சேர்ந்த சுகாதார நிறுவனமொன்று ஆள் தேடி வருகின்றது.

குடல் ஆரோக்கிய ஆலோசனை சேவை நிறுவனமான இந்த நிறுவனம் பணியில் சேர்பவர்களுக்கு 1.5 லட்சம் ரூபாய் மாதச் சம்பளமாக அதாவது ஆயிரத்து 500 யூரோவை வழங்கவுள்ளது.

குடலிலுள்ள பக்றீரியாக்கள் மனிதன் உண்ணும் உணவைச் சமிபாடு அடையச் செய்வதில் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றது.

மனித மலத்தில் இருந்து வெளியேறும் துர்நாற்றம், மலத்தின் நிறம், வடிவம் மற்றும் அமைப்பு ஆகியவை உடல் ஆரோக்கியத்தை குறிக்கிறது.

தேவையற்ற ஊட்டச்சத்து கழிவுகளாக முறையாக உடலில் இருந்து வெளியேற வேண்டும். இந்த சீரான செயல்முறை பாதிப்படையும்போது உடல்நலக் குறைவு வரலாம்.

துர்நாற்றம் அதிகமாக வெளியாகும் மலம் மோசமான குடல் ஆரோக்கியத்தை குறிப் பிடுகிறது என மருத்துவர்களால் சுட்டிக்காட் டப்படுகிறது.

இந்த நிலையில் மனிதர்கள் தங்கள் உணவுப் பழக்கத்தில் மேற்கொண்டுள்ள மாற்றத்தால் உடலளவில் ஏற்படும் விளைவுகள் குறித்து அறிந்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்தப் பணிக்கு ஆட்சேர்ப்பு செய்யப் படுகிறது என குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ச-இ)

# பல்கலைக்கழகப் படிப்பை தொடரும் 100 வயது பாட்டி

றொறன்ரோ, மார்ச் 16

கனடாவில் 100 வயது பாட்டி ஒருவர் பல்கலைக்கழக கல்வியைத் தொடர்கின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மிரியம் டீஸ் என்ற மூதாட்டியே 100 வயதில் கல்வியைத் தொடர்ந்து வருகின்றார்.

மிரியம் 1923 ஆம் ஆண்டு பிறந்தவராவார்.

இவர் பல்கலைக்கழகத்தில் தனக்கு மிகவும் பிடித்தமான பல்வேறு கற்கைநெறிகளை கற்றுத் தேர்ந்து வருகின்றார். (ச-இ)

## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

தெல்லிப்பழை மழலைகள் பூங்கா முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு, இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளி நிர்வாகக்குழுத் தலைவர் இராமநாதன் சேதுநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண முன்னாள் மாவட்டச் செயலரும் வட மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் தலைவருமான நா.வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ,14)


## வேலையாட்கள் தேவை

A9 வீதி திருமுறுகண்டியில் இயங்கும் சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் பணி வெற்றிடங்களுக்கு வேலையாட்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர்.

- ✔ காசாளர்
- ✔ சிட்டை எழுதுனர்
- ✔ சமையலாளர்
- ✔ சமையல் உதவியாளர்
- ✔ உணவு பரிமாறுபவர்
- ✔ சுத்திகரிப்பாளர்

ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். உணவு மற்றும் தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 386 6250 (CR 39456)(5/6)


# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குல தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். நண்பர்க ளுக்காக செலவு செய்யவேண்டி வரும். உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாகும். செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்களால் வீட்டில் பிரச்சினைகள் ஏற்படக் கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**துலாம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். அவசியத் தேவைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கும்பம்:** வீட்டில் உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உடல்ஆரோக்கியத்தில்கவனம்தேவை. வீண் அலைச்சலை தவிர்க்கவும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப் [illegible] ஏற்படக்கூடும்.


## மரண அறிவித்தல்



### சின்னக்குட்டி விஸ்வலிங்கம்

உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் திக்கத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி விஸ்வலிங்கம் கடந்த (12.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2023) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் தற்காலிக முகவரியான சாவகச்சேரி, நுணாவில் கிழக்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 39455) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அரசை வதைப்பதாய் நினைத்து...

நாடளாவிய ரீதியில் நேற்றையதினம் மிகப்பெரும் தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் திருத்தியமைக்கப்பட்ட வரிக்கொள்கை, மருத்துவப் பெருநெருக்கடி மற்றும் பொருளாதார நலிவு நிலை உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக சுமார் 40 தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தப் புறக்கணிப்பை நேற்று மேற்கொண்டுள்ளன. தொழிற்சங்க நடவடிக்கைக்காக எத்தனை காரணங்களை அடுக்கினாலும், 'திருத்தியமைக்கப்பட்ட வரிக்கொள்கை' தான் முதன்மைக்காரணம் என்பதும் இதர விடயங்களெல்லாம் தொழிற்சங்க நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்காக அடுக்கப்பட்ட துணைக்காரணங்கள் என்பதும் ஒன்றும் பரம இரகசியமல்ல. ஏனென்றால், பொருளாதார நலிவுநிலைக்காகவும் அல்லது மருத்துவப் பெருநெருக்கடிக்காகவும் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்வதென்றால் அது மேற்கொள்ளப்பட வேண்டிய கால நேரம் இதுவல்ல. இதைவிடவும் எத்தனையோ வாய்ப்புக்கள் இந்தத் தொழிற்சங்கங்களுக்குக் கிட்டியிருந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

இலங்கை இன்று எதிர்கொண்டிருக்கும் பொருளாதாரச் சீர்குலைவுகளுக்கெல்லாம் கோத்தாபய அரசாங்கம் வரிவிதிப்புக்களில் மேற்கொண்ட தளர்வுநிலை முக்கியமான காரணமாக அமைந்தது. இந்த வரித்தளர்வால் அரச வருமானத்துக்கும் அரச செலவினத்துக்கும் இடையே ஏற்பட்ட இமாலய இடைவெளியால், வெறும் ஓரிரு மாதங்களுக்குள் எம் கண்முன்னே இலங்கையின் பொருளாதாரம் சரிந்து விழுந்து தவிடுபொடியானது. இதனால், நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த, இந்தத் துண்டுவிழும் தொகையை சரி செய்ய வேண்டியது இன்றைய காலத்தேவையே. ஆதலால், அரசாங்கத்தின் இந்த வரித்திருத்தம் தேவையற்றதொன்று என அதை முற்றுமுழுதாகப் புறமொதுக்கிவிட முடியாது.

கடந்த காலங்களில் பொருள்களின் விலையேற்றங்கள் மற்றும் எரிபொருள் விலையேற்றங்கள் என்பவற்றால் பொருளாதாரத்தில் அடித்தட்டு நிலையில் இருந்த மக்கள் அதிக பாதிப்புக்களை எதிர்கொண்டனர், வரி விதிப்புக்களை மறைமுகமாகச் சுமந்துகொண்டனர். 'நடுத்தர வர்க்கம்' என்ற பொருளாதாரத் தரப்பினரே நாட்டில் இல்லாதுபோகும் அபாயமும் ஏற்பட்டது. ஆனால், இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் வரித்திருத்தம் செல்வந்தர்களுக்கானது. மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான ஊதியத்தைப் பெறுபவர்களுக்கானது. இந்த வரித்திருத்தத்தால் பாதிக்கப்படுகின்றோம் என்று தெரிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் தமது ஊதியத்தை விடவும் பலமடங்கு குறைவான வருமானத்தில் 'வாழ்வதற்காகப் போராடிக்கொண்டிருக்கும்' அடித்தட்டு அப்பாவி மக்கள் தொடர்பில் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இந்தச் சிந்தனையை அவர்கள் ஏற்படுத்திக்கொண்டால், கால்கள் இல்லாதவன் கால்களுக்கு அழ, கால்கள் உள்ளவன் செருப்புக்கு அழுத கதைதான் தமது போராட்டம் என்ற புரிதல் அவர்களுக்கு ஏற்படும்.

சரி, இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைகளால் தற்போது அவர்களுக்குத் தீர்வு கிட்டியதா? அல்லது அவ்வாறு கிட்டுவதற்குத்தான் வாய்ப்புள்ளதா? ஒருபோதும் இல்லை. அப்படியென்றால், இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையின் நோக்கம் தான் என்ன? அதன் வெற்றி என்று எதை இவர்கள் (போராட்டத்தில் ஈடுபடுபவர்கள்) அடையாளப்படுத்துவார்கள்? வரி விதிப்புக்கள் சட்டவிரோதமானவை. முறையற்றவை என்றால் அதைச் சவாலுக்குட்படுத்தும் வழிகளை மாற்றுத்திட்டங்கள் மூலம் கைக்கொள்ளவேண்டுமே அன்றி தொழிற்சங்க நடவடிக்கை என்பது அதற்குரிய தீர்வாக அமையாது. உண்மையில், அரசாங்கத்தை வதைப்பதாக – அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதாக நினைத்து அப்பாவிப் பொது மக்களைத்தான் இந்த தொழிற்சங்கப் போராட்டம் வதைத்துள்ளது.

இதேவேளை– நாட்டின் பொருளாதாரக் குலைவுக்கு காலாகாலம் பல்வேறு அரசாங்கங்களின் ஆட்சியில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் ஊழல் மோசடிகளும், ஊழல் பெருச்சாளிகளாக இருந்த அரசியல்வாதிகளும்தான் முதன்மைக் காரணம். எய்தவன் இருக்க அம்பை நொந்த கதையாக, நாட்டின் சொத்துக்களைச் சுருட்டிக்கொண்டு ஒரு கூட்டம் தப்பித்துவிட, அதற்கு அரச அதிகாரிகளைப் பலிக்கடாவாக்கும் இழிசெயலையும் அரசாங்கம் கைவிடவேண்டும். ஊழல் மோசடிகளுக்கு நீதி கிட்டினாலேயே நாட்டின் பொருளாதார நெருக்கடி பாதியாகக் குறைவடையும். ஆனால், பாலுக்கு பூனை காவலா?

### நாளொரு நல்வார்த்தை

"வாழ்நாளில் ஒரு நல்ல ஆசிரியர் சில சமயங்களில் குற்றவாளியை திடமான குடிமகனாக மாற்றலாம்"

– பிலிப் வைலி



# ஜனநாயகத்தைப் பாதுகாக்க தேர்தலை உடன் நடத்துக!

## மகாநாயக்கர்கள் வலியுறுத்து

**கொழும்பு, மார்ச் 16**

**ஜனநாயகத்தைப் பாதுகாப்பது என்பது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலின் மூலம் மக்களின் ஆணையை நிலைநாட்டுவது. உள்ளூராட்சித் தேர்தலை அதற்கேற்ப நடத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என்று மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரர் ஆகியோர், ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்திலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கும், மக்களின் சுமையைக் குறைப்பதற்கும், சமூக அமைதியின்மையைக் கட்டுப்படுத்துவதற்கும் முறையான கொள்கை அடிப்படையிலான பொறிமுறையை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். நாடு பொருளாதார உறுதித்தன்மை அடைவதை உறுதிசெய்வதில் அனைத்துப் பங்குதாரர்களும் தங்களது கடமைகளையும் பொறுப்புகளையும் புரிந்து கொள்வது அவசியம்.

பொருளாதார நெருக்கடியின் முழுச் சுமையையும் மக்கள் மீது சுமத்தாமல், பணத்தை முறையாக நிர்வாகம் செய்து ஊழலை ஒழிக்கவும், பொது வளங்களை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், மக்கள் பிரதிநிதிகள் அனுபவிக்கும் வரம்பற்ற சலுகைகளை நீக்கவும், நடைமுறைத் தீர்வுகளின் மூலம் மக்களின் துன்பங்களைக் குறைக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (ம-இ)

# உள்ளூராட்சி மன்ற நிர்வாகம்; விரைவில் புதிய அறிவிப்புகள்!

கொழும்பு, மார்ச் 16

மார்ச் 19 ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர், உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் செயலிழக்கவுள்ள நிலையில், அதன் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் விரைவில் புதிய அறிவிப்புக்கள் விடுக்கப்படும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகக் கட்டமைப்புக்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அமைச்சின் அதிகாரிகளுடன் விரைவில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும். அதன் பின்னர் இது தொடர்பில் புதிய அறிவிப்புக்கள் விடுக்கப்படும் என்று பிரதமர் மேலும் தெரிவித்தார். (ம-இ)

நாளை

17.03.2023
வெள்ளிக்கிழமை
பங்குனி 03

சுபநேரம் : 06.19 – 07.49
ராகுகாலம் : 10.49 – 12.19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாழ்.மாவட்ட

# சமுர்த்திப் பயனாளிகளுக்கென முல்லைத்தீவில் நெல் கொள்வனவு

## முல்லை மாவட்ட செயலகம் நடவடிக்கை

**யாழ்ப்பாணம், மார்ச் 16**

**முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளிடமிருந்து 100 ரூபாவுக்கு நெல்லை கொள்வனவு செய்து அதனை யாழ்.மாவட்டத்திலுள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை கமநலசேவைத் திணைக்களம் மற்றும் தனியார் நெல் ஆலை உரிமையாளர்கள் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளது.**



முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அதிகாரிகள் மட்டக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெருமளவான விவசாயிகள் அறுவடை செய்து சிறுபோக நெற்செய்கைக்கு தற்போது தயாராகி வருகின்றனர். அதேவேளை அறுவடை செய்யப்பட்ட நெல்லை தனியார் நிறுவனங்கள் அறாவிலைக்கு கொள்வனவு செய்ய முன்வருகின்றன. அதனால் சரியான விலையின்மையால் நெல் மூடைகள் தேக்கமடைகின்றன என விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து நெல்லைக் கொள்வனவு செய்து கண்டி மாவட்டத்திலுள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில் அதனை யாழ்.மாவட்டத்துக்கு விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையை மாவட்ட செயலகம், கமநல சேவைத் திணைக்களம் மற்றும் தனியார் நெல் ஆலை உரிமையாளர்கள் ஊடாக முன்னெடுத்து வருகின்றது.

இதுவரை விவசாயிகளிடமிருந்து 5 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதனை அரிசியாக மாற்றி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மேலும் 38 லட்சம் கிலோ நெல்லை முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-19)

வேலைவாய்ப்பு பணமோசடி

# அகதியாக சந்தேகநபர் தமிழகத்துக்கு தப்பிப்பு

## பாதிக்கப்பட்டோரில் ஒருவர் தமிழகத்தில் முறைப்பாடு

சென்னை, மார்ச் 16

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி பணமோசடியில் ஈடுபட்ட நபர், அகதியாக தமிழகத்துக்குத் தப்பிச்சென்றுள்ளார் என்று பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் ராமநாதபுரம் மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளரைநேரில் சந்தித்து முறைப்பாடு அளித்துள்ளார்.

திருகோணமலை வெருகல் பகுதியைச் சேர்ந்த நபர் உட்பட 23 பேர், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரிவதற்காக அதேபகுதியைச் சேர்ந்த நபரொருவரிடம் தலா 6 லட்சம் வீதம் பணம் கொடுத்துள்ளனர். பணத்தைப் பெற்றுக்கொண்ட நபர், 23 பேரையும் வெளிநாட்டுக்கு அனுப்பாமல் அவர்களை ஏமாற்றி, சட்டவிரோதமாக படகு மூலம் தப்பித்து தமிழகத்தின் தனுஷ்கோடிக்குச் சென்றுள்ளார். தற்போது அவர் மண்டபம் அகதிகள் முகாமில் அகதியாக தங்கியுள்ளார்.

இதனையறிந்த பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் நாட்டிலிருந்து தமிழகத்துக்குச் சென்று, வேலைவாய்ப்பு என தம்மிடம் பணமோசடியில் ஈடுபட்ட ஒருவர் தற்போது அகதியாக முகாமில் தங்கியுள்ளார். எனவே அவர் மீது நடவடிக்கை எடுத்து தமது பணத்தைப் பெற்றுத்தர வேண்டும் என்று மண்டபம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார். மண்டபம் பொலிஸார் முறைப்பாடு தொடர்பாக நடவடிக்கை எடுக்காததையடுத்து தொடர்ந்து மாவட்ட கண்காணிப்பாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார். (ஒ-14,56)

# தவறான பொலிஸ்மா அதிபரை ஜனாதிபதி நியமிக்கமாட்டார்

## மஹிந்த ராஜபக்ச சான்றிதழ்

கொழும்பு, மார்ச் 16



ஊழல் மோசடியற்ற, மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த ஒருவரை ஜனாதிபதி பொலிஸ்மா அதிபராக நியமிப்பார், முறையற்றவரை நிய மிக்கமாட்டார் என்று முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மொனராகலை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் அமைதியாக இருப்பதையிட்டு அரசியல் கட்சியினர் பொய்களை முன்னிலைப்படுத்தி மக்களைத் தவறாக வழிநடத்த ஆரம்பித்துள்ளார்கள். இதனால் இனி பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டுள்ளோம். அனைத்துச் சவால்களையும் வெற்றிகொண்டு முன்நோக்கிச் செல்லவேண்டும். வரலாற்று ரீதியில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டோம் என்பதை மறந்து விடக்கூடாது. பொருளாதார ரீதியில் முன்னேற்ற மடைய வேண்டுமாயின் அரசியல் நோக்கமற்ற வகையில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு யாரை யாவது பரிந்துரை செய்யுமாறு பலர் என்னிடம் தொலைபேசியில் குறிப்பிடுகிறார்கள். அரசமைப்புப் பேரவை பொலிஸ்மா அதிபரை நியமிக்க வேண்டும், சிறந்த ஒருவரை ஜனாதி பதி பொலிஸ்மா அதிபராகத் தெரிவுசெய்யவேண்டும். இல்லாவிடின் தற்போதைய பொலிஸ்மா அதிபரின் பதவியை நீடிக்கலாம். தவறான ஒரு வரை பொலிஸ்மா அதிபராக ஜனாதிபதி நியமிக்கமாட்டார் என்று எண்ணுகிறேன் - என்றார். (ம-14-இ)

# பொலிஸாரின் மோ.சைக்கிள் மோதியதில் முதியவர் காயம்!

கிளிநொச்சி, மார்ச் 16

போக்குவரத்துப் பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் மோதியதில் முதியவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைக்கு அண்மையில் ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

சைக்கிளில் பயணித்த முதியவர் ஏ-9 வீதியைக் கடக்க முற்பட்டவேளை, வேகமாகப் பயணித்த போக்குவரத்துப் பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் முதியவரை மோதியதில் விபத்து ஏற்பட்டது. விபத்தில் முதியவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14,113)

# நூற்றாண்டை முன்னிட்டு மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டை முன்னிட்டு மெய்வல்லுநர் போட்டிகள், இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கலாசாலை உடலாளர் மன்ற ஏற்பாட்டில் அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச்செயலர் அ. சிவபாலசுந்தரன், சிறப்பு விருந்தினராக கலாசாலையின் முன்னாள் அதிபர் சிவயோகநாயகி இராமநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-14)

# மருந்துப்பொருள்கள் வழங்குவதற்கு நலன்விரும்பிகள் முன்வரவேண்டும்

## கொடிகாமம் மருத்துவமனையினர் கோரிக்கை

சாவகச்சேரி, மார்ச் 16

கொடிகாமம் பிரதேச மருத்துவமனையில் நீரிழிவு நோயாளர்களுக்கான அத்தியாவசிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதனை நிவர்த்தி செய்யும் வகையில் ஒரு தொகை மருந்துப்பொருள்களை வழங்குவதற்கு நன்கொடையாளர்கள், நலன் விரும்பிகள் என சமூக நலன் சார்ந்த அனைவரும் முன்வரவேண்டும் என்று கொடிகாமம் பிரதேச மருத்துவமனையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொடிகாமம் பிரதேச மருத்துவமனையில் பிரதி செவ்வாய்க்கிழமைகளில் நீரிழிவு நோய் சிகிச்சை இடம்பெற்று வருகின்றது. இங்கு பல நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த நிலையில் நீரிழிவு நோய்க்கான மருந்துகளுக்கு மருத்துவமனையில் தட்டுப்பாடு நிலவுகின்றது.

மருந்துகள் இல்லாததால் சிகிச்சை பெறும் 300க்கும் மேற்பட்ட நோயாளர்கள் தனியார் மருந்துக் கடைகளில் மருந்துகள் வாங்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

மருத்துவமனையில் நிலவிய மருந்துத் தட்டுப்பாட்டை அறிந்த கெற்பேலியைச் சேர்ந்த நலன்விரும்பியொருவர் புலம்பெயர் நாட்டிலிருந்து வந்துள்ள அமரசிங்கம், சாவகச்சேரி வர்த்தகர் ஆகிய இருவரின் பங்களிப்பில் சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான நீரிழிவு மருந்து வகைகளை அண்மையில் அன்பளிப்பாக மருத்துவமனைக்கு வழங்கினார்.

இவ்வாறு அனைத்து நலன்விரும்பிகளும் நோயாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மருந்துப்பொருள்களை வழங்க முன்வரவேண்டும் என மருத்துவமனை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ-14,9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குடியிருப்பற்ற காணிக்குள்

# ஸ்லூடியோ கழிவு எரிப்பு; 2 குடும்பங்கள் இடப்பெயர்வு

சாவகச்சேரி, மார்ச் 16

நாவற்குழிப் பகுதியில் குடியிருப்புகளற்றுக் காணப்பட்ட வீதியோரக் காணிக்குள் புகைப்பட ஸ்லூடியோ கழிவுகள் கொட்டப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. இதனால் இப்பகுதிக்கு அருகிலிருந்த இரண்டு குடும்பங்கள் வேறிடத்துக்குச் சென்றுள்ளன,

யாழ்ப்பாணத்தில் உள்ள புகைப்பட ஸ்லூடியோ ஒன்றின் கழிவுகள் பெருமளவில் வாகனத்தில் கொண்டுவரப்பட்டு குடியிருப்பற்ற காணியில் கொட்டப்பட்டு தீயிடப்பட்டுள்ளது.

குப்பையிலிருந்து எழுந்த புகையால் பாதிப்படைந்த அயலில் உள்ள இரு குடும்பங்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த பின்னர் இருப்பிடத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

கடந்த ஒரு வாரமாக எரியும் கழிவுகளின் புகையிலிருந்து எழும் இரசாயன நாற்றம் சகிக்க முடியாதுள்ளது எனவும் அணைக்கச் செல்வோரும் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கழிவுகள் கொட்டுவதற்கு சூழல் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டதா? என சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14-9)

## பெயர் மாற்றம்

இல.57. பொன்னையா வீதி. ஆறுகால்மடம். ஆனைக்கோட்டை- யாழ்ப்பாணத்தில் வசிக்கும் து.உதயேஸ்வரன் கௌசலா ஆகிய நான் எனது பெயரை து.உதயேஸ்வரன் கௌசனா என மாற்றம் செய்வதோடு. இனிவரும் சகல ஆவணங்களிலும் து.உதயேஸ்வரன் கௌசனா என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோஷலிஸ் குடியரசுக்கும். மக்களுக்கும் உறுதிப்படுத்துகின்றேன்.

**உ.கௌசனா**

(CS 23992)(5/6)

## கண்ணீர் அஞ்சலி

நியூ மைதிலி ஜுவலர்ஸ் மற்றும் சந்தோஷ் ஜுவலர்ஸ் உரிமையாளரும், எமது கழகத்தின் அங்கத்தவருமாகிய

**நடராசா கஜந்தன்**


அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.** **யாழ். வணிகர் கழகம்**

(CR 39454)1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 12 . 1938



மறைவு 14 . 03 . 2023

### கனகரத்தினம் முருகேசபிள்ளை

பருத்தித்துறை. தும்பளை கலட்டியைப் பிறப்பிடமாகவும். மத்தொனி. கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் முருகேசபிள்ளை நேற்றுமுன்தினம் (14.03.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - கனகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும். காலஞ்சென்ற பார்வதியின் அன்புக் கணவரும். காலஞ்சென்ற இராகவன் மற்றும் அகிலா (பிரான்ஸ்). அனுஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். பே.மகிந்தகுமார் (பிரான்ஸ்). சி.பாபு (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும். ராகவி. சங்கவி. லதுஷா. ரதீஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2023) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மத்தொனி, கரவெட்டி.** **தகவல்: குடும்பத்தினர். 077 550 1861**

(CS 22936 ) 4/6

## கோவா விலை வீழ்ச்சி செய்கையாளர் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

கோவாவுக்கு போதிய சந்தைவாய்ப்பின்மையால் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளோம் என கோவா செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

யாழ்.குடாநாட்டுப் பகுதிகளில் பரவலாக செய்கை பண்ணப்பட்ட கோவா பயிர்கள் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. போதியளவு கோவாக்கள் சந்தைக்கு கிடைக்கப்பெறுகின்றமையால் அவற்றின் விலை வீழ்ச்சியடைந்துள்ளன. ஒரு கிலோ கோவா 60 ரூபா முதல் 80 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றது.

கோவா விலை வீழ்ச்சி மற்றும் போதிய சந்தை வாய்ப்பின்மை உள்ளிட்டவை காரணமாக அவற்றை கால்நடை தீவனத்துக்கே பயன்படுத்த வேண்டிய நிலை செய்கையாளர்களுக்கு உருவாகியுள்ளது - என்றனர். (ச-17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி


அமரர்

**பொன்னம்பலம் வீரபத்திரன்**

(ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர்)

அன்னை மடியில் 21.03.1935 அரண் அடியில் 26.03.2022

திதி:- அபரபக்க நவமி (16.03.2023)



ஆண்டொன்று மறைந்ததையா
மீளா உலகு நீர் சென்றீர்
வேண்டுகிறோம் சிவன் சேவடி
உங்கள் ஆன்மா அமைதிபெற

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

193, காதி அபூபக்கர் வீதி,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் சொரிவு

தோற்றம் 04 . 04 . 1959



மறைவு 15 . 03 . 2023

### வே. கருணாகரன்

(இளைப்பாறிய பொருளியல் ஆசிரியர்)

கருணைக் கடலே கருணா
கலங்கி நிற்கின்றோம் இங்கு
காண்பதெல்லாம் அன்பு என்பீர்
காணாதவர்க்கெல்லாம் நண்புரா நீர்
கண்டதெல்லாம் பேரின்பமே

வாழ்விற்கு எடுத்துக்காட்டானீர்
வாழ்ந்த வீட்டிற்கு வளம் சேர்த்தீர்
வாழும் நாளில் உளம் சினம் அறியோம்
வாழ்வில் யாவும் பெற்றேன் என்பீர்
வாழ்வில் நிறைவு கண்டவர் நீரே

சாயி அடிபற்றி
உம் உயிர் அமைதி பெற வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(CS/23988)4,6

**கனகரத்தினம் ம.ம.வி. நண்பர்கள்.**

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 31.03.1923 அம்மன் மடியில் 12.04.2004

### அமரர் பண்டாரி வேலாயுதம்

(மட்டுவில் தெற்கு. சாவகச்சேரி. வேரற் கேணியடி)

திதி: 16.03.2023

தலை நிமிர்ந்து வாழ வைத்த தந்தையே!
இந்த நாளில் தலை சாய்த்து வணங்குகிறோம்
ஆண்டுகள் பத்தொன்பது ஆகிவிட்டதே அப்பா!
ஆனாலும் நீங்காத நினைவுகளை இதயத்தில் சுமந்து
நீர் ததும்பும் விழிகளுடன் நினைவு கூருகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(CS.23956) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
## நயினாதீவு

## நிறைவேற்று அலுவலர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் கடமையாற்றுவதற்கு பின்வரும் தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடம் - 01 - நிறைவேற்று அலுவலர்**

**நிபந்தனைகள்:**

- பல்கலைக்கழகப் பட்டதாரியாக அல்லது அரசசேவைப் பதவி நிலைத் தரத்திலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 65 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
- இந்து சமயத்தவராகவும், சமய ஆசாரசீலராகவும் இருத்தல் வேண்டும்.
- கோவிலின் சூழலில் தங்கியிருந்து பணியாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- மும்மொழிப் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) புலமையுடையவராக இருத்தல்வேண்டும்.
- சிறந்த தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல்வேண்டும். (ஓய்வு நிலையுடையவர்கள் விண்ணப்பிக்கும்போது தேக ஆரோக்கியத்தினை உறுதிப்படுத்தி வைத்திய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.)

தாங்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை **"செயலாளர்" அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு** எனும் முகவரிக்கு பதிவுஞ்சல் மூலம் 30.03.2023 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**திரு.ந.மோகனரூபன்**
**செயலாளர்**
**அறங்காவலர் சபை**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,**
**நயினாதீவு.**

(CR 3945311-6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 04 . 1959



மறைவு 15 . 03 . 2023

## வேலாயுதம் கருணாகரன்

**(ஓய்வுபெற்ற பொருளியல் பேராசான் – களு/ பேருவளை பாலிஹா வித்., யா/ கனகரத்தினம் ம.ம.வி., யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி)**

மூளாயைப் பிறப்பிடமாகவும், 215, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் கருணாகரன் நேற்று (15.03.2023) புதன்கிழமை அதிகாலை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் (ஆசிரியர்) - மனோன்மணி தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற அதிபர்) மற்றும் இராசம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை) தம்பதிகளின் அருமை மருமகனும், சயந்தி (ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/ யாழ். மத்திய கல்லூரி) யின் ஆருயிர்க் கணவரும், அனிதா (பொறியியலாளர்), கோபிகாந் (மொரட்டுவ பல்கலைக்கழகம் - பொறியியல் பீட 3ஆம் வருட மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசிகனின் (பொறியியலாளர்) பிரியமிகு மாமனாரும், பிரகவனின் ஆசைப் பேரனும், மனோராணி, மதனராணி, ஆனந்தராணி, சிவராணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், இராசரத்தினம், குமரகுருநாதன் காலஞ்சென்ற தர்மேசன் மற்றும் நந்தகுமார் ஆகியோரின் மைத்துனரும், பத்மராணி, ஈஸ்வரன் (கனடா), தயாளன்; காலஞ்சென்ற உமாபரன் ஆகியோரின் மனைவி வழி மைத்துனரும், கிருஷ்ணதாசன், கலையரசி (கனடா), காலஞ்சென்ற சிவறஞ்சினி ஆகியோரின் சகலனும், பஞ்சாட்சரம் - சந்திரமலர் தம்பதிகளின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2023) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**215, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/2398)4.6


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

### சிற்பாச்சாரிய திலகம், கலைவாணன், சில்ப அபிமானி, விஸ்வப் பிரம்மஸ்ரீ

## தம்பிஜயா குகதாசன் ஆச்சாரியார்
## (ஸ்தபதி)



திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், உடுவில் காளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தம்பிஜயா குகதாசன் கடந்த (13.03.2023) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - தங்கம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற நடராசா - அன்னபாக்கியம் தம்பதிகளினதும், காலஞ்சென்ற கதிரவேலு - இராஜேஸ்வரி தம்பதிகளினதும் மருமகனும், காலஞ்சென்ற கமலினி மற்றும் இராசலட்சுமி ஆகியோரின் அன்புக் கணவரும், யோகேஸ்வரி, காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் அன்னலிங்கம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப முகாமையாளர் ஸ்ரீலங்கா டெலிகொம்) ஆகியோரின் மூத்த சகோதரரும் சண்முகரட்ணம், நாகலட்சுமி (ஹொலன்ட்) செல்வ மனோகரி மற்றும் சாந்தினி காலஞ்சென்ற சுபாஜினி மற்றும் சாந்தகுமார், நந்தகுமார், வசந்தகுமாரி, சுபோதினி, காலஞ்சென்ற கருணாநிதி மற்றும் ஜெகதீஸ்வரன் (ஜெகன்) ஆகியோரின் மைத்துனரும் பிரதீபன், துர்க்கா, கோவர்தனன் (ஹொலன்ட்), கௌதமி (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் ரம்யா, பாலகுமார் (ஹொலன்ட்), கோபிசங்கர், லுக்சாந்தன், மயூரதன் ஆகியோரின் பெரிய தந்தையும் கஜானி, பிரித்திகா, மதுசாந், கார்த்திகன், யசோதன், இமையா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2023) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் பூவோடை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அம்பலவாணர் வீதி, காளி கோவிலடி,**
**உடுவில்.**
**021-224 1071 / 071-536 0859**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/2398)4.6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

வலி.வடக்கு ஓய்வூதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழைக் கூட்டுறவு மருத்துவமனைக்கு முன் பாகவுள்ள தெல்லிப்பழை அரிமாகழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தனிநபர் பிரேரணைகள் தர விரும்பும் அங்கத்தவர்கள் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் உஷா நாகராஜா, காங்கேசன்துறை வீதி, மல்லாகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சங்கத்தின் தலைவர் எ.சின்னத் தம்பி அறிவித்துள்ளார். (ஒ-14)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

நவாலி ஸ்ரீ நாக ராஜ ராஜேஸ்வரி அம்பாள் திருக் கோயிலின் மஹோற்சவம், எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்து டன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத்திருவிழாவும், 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், 5ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் தீர்த்தத் திருவிழா வும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது என்று ஆலய தேவஸ்தானசபை அறிவித்துள்ளது. (ஒ-14)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் அரசடி ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 நாள்கள் உற்சவம் நடைபெற்று பத்தாம் நாள் மகா கும்பாபிஷேகம் ஆலய விசேட பிரதமகுரு பிரம்மஸ்ரீ மா.பிரபாகரக் குருக்கள் தலைமையில் இடம் பெறவுள்ளது என ஆலய பரிபாலனசபை அறிவித்துள் ளது. (ச-இ)

# குறைவடைகிறது டெங்குத் தாக்கம்

யாழ். மாநகர சுகாதாரப்பிரிவு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். மாநகர பிரதேசங்களில் டெங்கின் தாக்கம் தற்போது குறைவடைந்துள்ளது என யாழ். மாநகர சுகாதாரப்பிரிவு தெரிவித்துள்ளது.தற்போது நிலவும் வறட்சிநிலை மற்றும் அதிகரித்த வெப்பம் உள்ளிட்ட காலநிலை வேறுபாட்டால் நுளம்புகள் பெருக்கம் குறைவடைந்துள்ளது. அதன் காரணமாக டெங்கால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கையும் குறைவாகப் பதிவாகின்றன. கடந்த பெப்ரவரி மாதத்தில் 51 பேர் வரையில் டெங்கால் பாதிப்படைந்த நிலையில் இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 5 பேர் மாத்திரமே டெங்குத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர் என யாழ். மாநகர சுகாதாரப்பிரிவு மேலும் குறிப்பிட்டது. (ச-17)




**நீங்கள் விரும்பிய நாடுகளில் உங்களது கல்வியை தொடர எங்களை நாடுங்கள்**

Sweden, France, Switzerland, Finland, Spain, Germany, Hungary, Romania, Latvia, Lithuania, Belarus, Russia ஆகிய நாடுகளுக்கு IELTS தேவையில்லை.

- Business
- Accounting
- MBA
- Engineering
- Nursing and Midwifery
- Tourism
- Information Technology
- Psychological Science

கல்வியுடன் கூடிய வேலை வாய்ப்பு
2023 / 2024 ஆண்டிற்கான பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

STUDY → WORK → MIGRATE

இன்றே விண்ணப்பியுங்கள்

19.03.2023 யாழ் இந்துக் கல்லூரிக்கு (Jaffna Hindu College) நேரில் சமுகமளித்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்.

**Trust International Education (PVT) Ltd**
Head Office: Sarasi Buildings, No. 197/B, Colombo Road, Wennappuwa, Sri Lanka.
tieducation8@gmail.com | www.trustied.com | +94 312 256 850
+94 777 192 550 | +94 773 492 550 | +94 742 162 550 | +94 740 042 550

**வெளிநாட்டில் உயர் கல்வியுடன் கூடிய வேலை வாய்ப்பு!**

உயர் கல்வியை தொடரக்கூடிய அதி முன்னணி மிக்க நாடுகளின் பட்டியலில் New Zealand, Australia, Canada, UK, USA, Ireland மற்றும் European நாடுகளான Sweden, Finland, Spain, Hungary and Romania க்கும் அதி குறைந்த பாட நெறிக்கட்டணத்துடன் உயர் கல்வித் தகைமைகளை பெறலாம்.

**Why choose Beverley International?**

- Expert since 2007
- High success rate in Visas
- Assistance in admission for students
- Most trusted visa consultancy in the country
- Scholarship opportunities
- Financial Guidance

நேரில் சமுகமளித்து ஆலோசனைகளை பெற

(Open day at Jaffna Branch) - 2023 மார்ச் 18
2023 மார்ச் 19 - யாழ் இந்துக் கல்லூரி (JAFFNA HINDU COLLEGE)

உடன் பதிவுகளுக்கு இன்றே எம்மை அழையுங்கள்!!!


0777 284 029 | 0212 210 277 | 0706 697 660 | 0776 929 773

**Beverley International**
Jaffna Office : No. 401, Clock Tower Road, Jaffna.
Head Office - No. 3/5, 3rd Floor, Kollupitiya, Colombo - 03, Sri Lanka. Tel : 0112 576 656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 - 05 - 1946 | 15 - 03 - 2023 |



### சின்னப்பு தர்மலிங்கம்

இணுவில் நாலாங்கட்டையடியை பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கு உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு தர்மலிங்கம் நேற்று (15.03.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு கனகம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு சிவக்கொழுந்து தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், லோகேஸ்வரி (விசி), சுதன், சுதாசினி, சுதர்சினி ஆகியோரின் தந்தையும், உமா, தர்மலிங்கம், இராஜேஸ்வரன் (ராசன்), உருத்திரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் இந்து மயானத்திற்கு முற்பகல் 11.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உரும்பிராய் வடக்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(CS 23996)(5/6)

"ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ"

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 04 . 06 . 1932 | 15 . 03 . 2023 |



### நடராசா சோதிலிங்கம்

**(முன்னாள் சினிமாஸ் லிமிட்டெட் பிரதி நிதியும், வண்ணை அரசடி விநாயகர் ஆலய முகாமையாளரும்)**

யாழ். ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சோதிலிங்கம் அவர்கள் நேற்று (15.03.2023) புதன்கிழமை மாலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா சிவபாக்கியம் தம்பதியரின் மூத்த மகனும். காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் வாலாம்பிகை தம்பதியரின் மூத்த மருமகனும், மகாலட்சுமியின் அன்புக் கணவரும், அங்கையற்கன்னி, பரந்தாமன் (ஜேர்மனி), காலஞ்சென்ற பவானி ஆகியோரின் அன்புத் தந்தையும், கைலாயநாதன், ஜெயலஷ்சுமி (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெயசங்கர் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரதிக்கா - கோகுலதாஸ் (பிரான்ஸ்), குருநேஷன், கௌரிஷன், றெனிஸ், லனிஷா, லௌஜானி, ஜெய்பவான் - கார்த்திகா ஆகியோரின் பேரனும், சர்வினின் பூட்டனும், விநாயகலிங்கம், சுந்தரலிங்கம், ஞானேஸ்வரி, மகாதேவா (கனடா), வாமதேவா, பற்குணநாதன் (பிரான்ஸ்), புஸ்பநாதன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் பாலசுந்தரன், இந்திராணி, அனந்த நாராயணன், சத்தியபாமா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2023) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைகள் பி.ப 1.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**425, நாவலர் வீதி,**
**ஆனைப்பந்தி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 23998) 1/6

## மரண அறிவித்தல்

### பொன் மதிமுகராஜா விஜயலட்சுமி



தாவடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாக வும் கொண்ட பொன் மதிமுகராஜா விஜயலட்சுமி அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன் மதிமுகராஜாவின் (TULF) (முன்னாள் தமிழர் விடுதலை கூட்டணியின் யாழ். மாவட்ட செயலாளர் நாயகமும், அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவரும், சமாதான நீதவானும், திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும், முன்னாள் வட பிராந்திய மினிபஸ் சங்கத் தலைவரும்) மனைவியும், சிவக்கொழுந்து நாகரத்தினம் தம்பதிய ரின் மகளும், பொன்னுத்துரை செல்லம்மா தம்பதி யரின் ஆசை மருமகளும், விஜயமதி, கஸ்தூரிமதி, விஜயகாந்த், விஜயவர்மன் ஆகியோரின் அம்மாவும், மதிகாந்த், விசானி, அரிகரன், விகாஷ்னி, அஜிகரன் ஆகியோரின் அப்பம்மாவும், சிவலிங்கத்தின் ஆசை அக்காவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.03.2023) வியாழக் கிழமை கல்கிச மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் கல்கிச இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்தத் தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"ஸ்ரீமுருகபவனம்"**
**தாவடி வடக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**பொன் மதிமுகராஜா**
**விஜயகாந்த்**
**077 620 2077**

(CS 329971) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலவந்தமான...

தகவல்கள் வெளியாகியுள்ளன.

மாணவனின் வாக்குமூலத்தின் அடிப்படையில் பாடசாலை மாணவர்களை அச்சுறுத்தி பலவந்த தன்பால் சேர்க்கைக்குட்படுத்தும் கும்பல் ஒன்று தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸார், சந்தேகநபர்களை அடையாளம் கண்டு, கைது செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

தரம் 11 இல் கற்கும் மாணவனொருவன் உயிர்மாய்க்கும் நோக்கோடு, கடந்த 13ஆம் திகதி நண்பகல் பாடசாலையில் உள்ள மாடிக் கட்டடம் ஒன்றின் 3 ஆவது மாடியில் இருந்து கீழே குதித்தான். அங்கிருந்த மின்மார்க்க வயர்களில் சிக்குண்டு கீழே வீழ்ந்த மாணவர், மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

'ப்ளூவேல்ஸ்' என்ற இணைய விளையாட்டில் ஈடுபடுகின்றேன். அதில் என்னுடன் இணைந்து விளையாடுபவர்கள் என்னைக் கொல்ல முயல்கின்றார்கள்' என்று மாணவன் தன் உயிர்மாய்ப்பு முயற்சிக்கான காரணத்தைக் கடிதமொன்றில் குறிப்பிட்டிருந்தார். அதன் அடிப்படையில் முற்கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்த மாணவனிடம் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், மாணவன் வழங்கிய வாக்குமூலம் திடீர் திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுத் தொடர்ச்சியாக பலவந்தமான தன்பால் சேர்க்கைக்குட்படுத்தப்படுத்தும் கும்பல் ஒன்றால் பாதிக்கப்பட்டமையே இந்த உயிர்மாய்ப்பு முயற்சிக்கு காரணம் என்று அந்த வாக்குமூலத்தில் மாணவன் தெரிவித்ததை அடுத்து, பொலிஸார் விசாரணைகளைத் தீவிரப்படுத்தினர்.

மாணவன் மனக்குழப்பத்துடன் உள்ளார் என்றும் அவர் முன்னுக்குப்பின் முரணாக தகவல்களை வழங்குகின்றார் என்றும் தெரிவிக்கப்படும் நிலையில், பொலிஸார் ஏனைய மாணவர்கள் மத்தியில் இது தொடர்பாகத் தகவல்களைச் சேகரிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். 80க்கும் மேற்பட்ட மாணவர்களிடம் பொலிஸார் தகவல்களைச் சேகரித்திருந்த நிலையில், பொலிஸாரின் சந்தேகத்தை உறுதிப்படுத்தும் வகையில் மாணவர்களிடம் இருந்து தகவல்கள் கிடைத்துள்ளன. அவற்றின் அடிப்படையில் பிரதான சந்தேகநபரை அடையாளப்படுத்தியுள்ள பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

விசாரணைகளின் அடிப்படையில் ஒரு கும்பல் மாணவர்களை அச்சுறுத்தி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதும், மாணவர்கள் விழிப்படைந்து அவர்கள் பிடியில் இருந்து வெளியேற முயலும் போது, அந்தக் கும்பல் வீடியோ பதிவுகளை வைத்து மிரட்டி தொடர்ச்சியாக பலவந்த தன்பால் சேர்க்கைக்குட்படுத்தியுள்ளது என்றும் தெரியவருகின்றது. இது கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்துவருகின்றது என்பது விசாரணைகளில் தெரியவந்திருக்கின்றது.

மாணவன் தனது வாக்குமூலத்தில் இருவரின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். அவர்களில் ஒருவர் குறித்த பாடசாலைக்கு அருகில் இயங்கிய ஊடக நிறுவனம் ஒன்றில் பல மாதங்களுக்கு முன்னர் தங்கியிருந்தவர் என்று கூறப்படுகின்றது. இவர் வாள்வெட்டுக் குழுக்களுடனும் தொடர்புடையவர் என்றும், போதை மாத்திரை விற்பனையில் ஈடுபடுபவர் என்றும் பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன.

அதேநேரம், 15 வயது மாணவர்களை இலக்கு வைத்தே இந்தக் கும்பல் செயற்பட்டுள்ளது என்பதும் தெரியவந்துள்ளது. அவரே இந்தச் சம்பவங்களின் பிரதான சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்படுகின்றது. அத்துடன் அந்தக் கும்பலைப் பற்றிய தகவல்கள் பொலிஸாரால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அதேநேரம் அண்மையில் இந்தப் பாடசாலையின் விடுதி மேற்பார்வையாளர் மீது பாலியல் சீண்டல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், அது தொடர்பில் பாடசாலையால் கல்வித் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது என்றும், விடுதி மேற்பார்வையாளர் மீது நடவடிக்கை எடுக்காத கல்வித் திணைக்களம் அவரை இரவுக் காவலாளியாக பணிமாற்றம் செய்தது என்றும் பாடசாலை வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (அ-எ-26)

## நாட்டின்...

அரச மருத்துவர்கள், விசேட மருத்துவ நிபுணர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், மருத்துவ பீட விரிவுரையாளர்கள், மின்சார பொறியியலாளர்கள், வங்கிச் சேவை ஊழியர்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள், வீதி அபிவிருத்தி, கல்வி நிர்வாகம், நில அளவைத் திணைக்களம், வருமான வரி, அஞ்சல் சேவை ஊழியர்கள் உட்பட 47 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தொழிற்சங்க கூட்டமைப்பினர் நேற்று தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று நாடளாவிய ரீதியில் கல்விச் செயற்பாடுகள் முடக்கப்பட்டன. ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்காமையால் மாணவர்கள் பாடசாலைக்கு வந்து திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

மருத்துவமனைகளில் நேற்று வெளிநோயாளர் பிரிவுகள், மாதாந்தக் கிளினிக் என்பன இயங்கவில்லை. அவசர சிகிச்சைகள் மட்டுமே வழங்கப்பட்டன. மருத்துவமனைகளுக்கு வந்த நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

அரச வங்கிகள் சில தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதும், தனியார் வங்கிகள் நேற்று வழமைபோன்று இயங்கின. அதேநேரம் போக்குவரத்துச் சேவைகளும் வழமைபோன்று இயங்கின. ஆயினும் மக்களின் நடமாட்டம் நேற்றுக் குறைவாகவே காணப்பட்டது.

அதேநேரம், நாடளாவிய ரீதியிலும், வடக்கு மாகாணத்திலும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராகப் பல்வேறு இடங்களில் நேற்று ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலும், வவுனியா நகரப் பகுதியிலும் இலங்கை ஆசிரியர் சங்கத்தால் அரசாங்கத்துக்கு எதிராகக் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக அதிபர்கள், ஆசிரியர்கள் இணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் எனப் பலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

வவுனியாவில், பழைய பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பித்த பேரணி மணிக்கூட்டுச் சந்தியை அடைந்து அங்கிருந்து வலயக் கல்வி அலுவலகம் வரை சென்று மீண்டும் பழைய பஸ் நிலையத்தை அடைந்தது. வவுனியா பல்கலைக்கழகத்துக்கு முன்பாக வவுனியா பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தால் புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் விரிவுரையாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

(அ-எ-27,20,17,110,113,19,56,9)

## போராட்டம்...

நேற்று நாடளாவிய ரீதியில் 100 சதவீதம் பாடசாலைகள் மூடப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், வேறு பல கோரிக்கைகளை முன்வைத்தும் நேற்று நாடளாவிய ரீதியில் 40 க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தன. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே ஜோசப் ஸ்டாலின் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ-எ-இ)

## ஐ.எம்.எப்....

அறியமுடிகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் இந்த மாதம் 20ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டால், 22ஆம் திகதி இலங்கைக்கு 350 மில்லியன் டொலர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தநிலையில் அமைச்சரவை மாற்றம் ஒன்றுக்கு முன்னாள் அமைச்சர்கள் பலர் அழுத்தம் கொடுத்து வருகின்றனர். ஆயினும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்கும்வரையில் புதிய அமைச்சர்கள் எவரையும் நியமிப்பதில்லை என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிடிவாதமாகவுள்ளார். 22ஆம் திகதி நாணய நிதியத்தின் நிதி கிடைக்கும் பட்சத்தில் அதன்பின்னர் அமைச்சரவையில் மாற்றங்கள் செய்வது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது என்று அந்த உயர்மட்டத் தகவல்களில் இருந்து அறியமுடிகின்றது. (அ-எ-இ)

## டொலர்...

தினத்துடன் ஒப்பிடும்போது நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நேற்றைய நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 344.66 ரூபாவாகவும், கொள்வனவு விலை 327.59 ரூபாவாகவும் காணப்பட்டது.

யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 371.78 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 351.66 ரூபாவாகவும் காணப்பட்டது. ஸ்டெர்லிங் பவுண்ட் ஒன்றின் விற்பனைப் பெறுமதி 420.68 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 398.26 ரூபாவாகவும் காணப்பட்டது. (அ-எ-இ)

## ஸஹ்ரானின்...

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவதின் பின்னர் ஸஹ்ரான் ஹாசிமின் மனைவி பாத்திமா ஹதியா பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். அவர் கடந்த 4 ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்த வழக்கு நேற்று கல்முனை மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பாத்திமா ஹதியாவுக்கு கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டது.

25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 25 லட்சம் ரூபா அடங்கலான இரு ஆள் பிணையிலும் செல்ல மேல் நீதிமன்றம் அனுமதித்தது. பிணை நிற்பவர் மற்றும் பாத்திமா ஹதியா ஆகியோர் வெளிநாடு செல்லவும் நீதிமன்று தடை விதித்தது.

எதிர்வரும் மே மாதம் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் என்றும் கல்முனை மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-எ-இ)

## பிசுபிசுத்து...

களைச் சார்ந்த துறைகள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டன. ஆயினும் இந்தச் சேவைகள் முற்றாக முடங்கவில்லை. மக்களுக்கான சேவைகள் தடையின்றி வழங்கப்பட்டன என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஒவ்வொரு துறைசார் பிரதானிகளைக் குறிப்பிட்டு ஜனாதிபதி ஊடகப்பிரிவு ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தொழிற்சங்க போராட்டத்துக்கு மத்தியிலும் ரயில்வே ஊழியர்களின் அர்ப்பணிப்புடன், காலை 8 மணி வரை பயணிகளின் வசதிக்காக 20 ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டன என்று ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் உறுதிப்படுத்தினார்.

இலங்கை வங்கியின் தலைமையகம் உள்ளிட்ட 265 கிளைகளில் வழமை போன்று சேவைகள் முன்னெடுக்கப்பட்டன என்று இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் ருசெல் பொன்சேகா தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் 352 கிளைகளில் 330 கிளைகளில் 75 சதவீத ஊழியர்களின் வருகையுடன் வாடிக்கையாளர்களுக்கான சேவைகள் தடையின்றி வழங்கப்பட்டன என்று மக்கள் வங்கியின் பதில் முகாமைத்துவ பணிப்பாளர் கிளைவ் பொன்சேகா தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த ஒத்துழைக்கும் நோக்கில் எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கையிலும் தாம் ஈடுபடவில்லை என இலங்கை மின்சாரசபை காசாளர் சங்கம் அறிவித்துள்ளது.

வழமையான அன்றாட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக நேற்று முற்பகல் வரை 6 ஆயிரத்து 600 லீற்றர் கொள்ளளவு கொண்ட 300க்கும் மேற்பட்ட பெற்றோல் மற்றும் டீசல் பவுஸர்கள் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டன.

இலங்கை போக்குவரத்து சபையின் 107 டிப்போக்களிலும் வழமை போன்று கால அட்டவணையின்படி பஸ்கள் சேவையில் ஈடுபட்டன. 8 தொழிற்சங்கங்களில் ஜே.வி.பி.யின் ஒரு தொழிற்சங்கம் தவிர்ந்த ஏனைய அனைத்து தொழிற்சங்கங்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கின என்று போக்குவரத்துச் சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார் என்று அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-எ-இ)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தாவடியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு.

K.K.S. வீதியில் இருந்து இரண்டாவது காணி.


தாவடி சந்தியிலிருந்து 100 M தூரத்தில்.

தொடர்பு:- 076 43 65 814

(CS 239771)1-6


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு 15.09.1978 உதிர்வு 14.03.2023

## திரு.நடராசா கஜந்தன்

**(உரிமையாளர்– நியூ மைதிலி ஜுவலஸ், சந்தோஷ் ஜுவல்லறி)**

மண்கும்பான் மேற்கு 5ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல.270 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நடராசா கஜந்தன் நேற்று முன்தினம் (14.03.2023) செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா தங்கமலர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற உருத்திரசிங்கம் மற்றும் சரோஜினிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், துஷ்யந்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சந்தோஷி மற்றும் டினோஷி (கொழும்பு, சைவ மங்கையர் வித்தியாலயம்), பிரவினாஷ் (கொழும்பு சென் பீற்றேர்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலினி, மைதிலி, ஆனந்தன் (மைதிலி நகைமாடம் PVT, யாழ். மைதிலி ஜுவல்லறி செட்டித் தெரு, கொழும்பு-11) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பரமசிவம் (சிறிமதனா நகை மாளிகை, மதனா நகைமாடம்), நகுலேஸ்வரன் (நியூ லலிதாஸ் ஜுவல்லறி, நியூ நகுலா ஜுவல்லறி), சிவரஞ்சினி, மேனகா, வாகீசன் (நாரம்மல), செந்தீசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2023) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சந்தோஷி மஹால்**
**இல.270, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

## வவு. விவசாயிகளுக்கு மானிய டீசல் வழங்கல்

வவுனியா, மார்ச் 16

வவுனியா கமநல சேவைகள் நிலையத்தின் ஏற்பாட்டில் காலபோக நெற்செய்கை விவசாயிகளுக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மானிய டீசல் வழங்கப்பட்டது.

இறம்பைக்குளதில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊடாக 180 விவசாயிகளுக்கு, நெற்செய்கை அறுவடைக்காக ஏக்கர் ஒன்றுக்கு 4 லீற்றர் வீதம் டீசல் வழங்கப்பட்டது.

இதேவேளை - கோவில்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 286 விவசாயிகளுக்கு 8 ஆயிரத்து 901 லீற்றர் டீசல் வழங்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த இரு நாள்களில் 348 விவசாயிகளுக்கு ஆயிரத்து 286 லீற்றர் டீசல் வழங்கப்பட்டுள்ளது.

(ஒ-14-110)


**ஆற்றுமணல் சல்லி தேவை**

மொத்தமாக கொள்வனவு செய்ய 3 cube Dipper உள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்

**076 249 4592**

(CS/23986)4,6

**மணமக்கள் தேவை**

யாழ். 1995 பூரம் 2ஆம் பாதம்.(K) பட்டதாரி பெண்ணுக்கு உள்ளூரில் உயர் அரச உத்தியோகம் மணமகனை எதிர்பார்க்கின்றோம். கனடாவில் வசிக்கும் 1986 அச்சுவினி(K) ஆணுக்கு கனடாவில் வசிக்கும் மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

Whatsapp: 077 0070 646

(CS 23993)(5/6)

**புடைவையகத்துக்கு வேலையாள்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் புடைவையகத்துக்கு ஆண், பெண் பணியாளர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 855 4840**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம்
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை 1 இலட்சம் ரூபா மட்டும்.
- 03 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு:
**076 755 8606**
**074 318 7263**

(CS 23979)1-6


## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தாயின் மடியில் 19 . 09 . 1948

இறைவன் அடியில் 14 . 02 . 2023

கடந்த 14.02.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் கனகரத்தினம் இராசமணி

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.03.2023) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்திய கிரியைகள் முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். மதிய போசன நிகழ்வுகள் எதிர்வரும் (18.03.2023) சனிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது அன்பு அன்னையின் மறைவுச் செய்தி அறிந்து எமது துயர் பகிர நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் அனுதாபச் செய்திகளை தொலைபேசி, குறுஞ்செய்தி, சமூக வலைத்தளங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் தெரிவித்தவர்களுக்கும் பல்வேறு வகைகளிலும் எமக்கு உதவியாக தோளோடு தோள் கொடுத்து நிற்கும் அனைவருக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மாப்புலவுவீதி,**
**வதிரி, கரவெட்டி.**

(CS/23892)4,6

**குடும்பத்தினர்.**
**021 226 4643**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்: advt@uthayan.com

பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.